# *இலங்கையில் மஸ்ஜித் கட்டிடக்கலையின்பரிணாமம்: வரலாற்று மஸ்ஜித்களில் நேர்வுநிலை ஆய்வு*

# (EVOLUTION OF MOSQUE ARCHITECTURE IN SRI LANKA: A CASE STUDY ON THE HISTORICAL MOSQUES)

**RESEARCHER**

**FAYAS**

SEU/IS/16/IC/100

ITC061

2020/2021

**SUPERVISOR**

**DR. RA. SARJOON**

PROF IN ISLAMC CULTURE

DEPT. OF ISLAMIC STUDIES

FIA/ SEUSL

***ஆய்வுச் சுருக்கம்:*** *இஸ்லாமிய கட்டிடக்கலை அதன் நுண்கலைகளில் ஒன்றாகும். பிரதான இஸ்லாமிய நிறுவனமாக மஸ்ஜித் அதனை பிரதிபலிப்பதோடு, பிரத்யோகமான கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்டு நிர்மாணிக்கப்படுகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட வருட கால வரலாற்றினை கொண்டுள்ள இலங்கை முஸ்லிம்கள் மஸ்ஜித்களை நிர்மாணித்து வருகின்றனர். இம்மஸ்ஜித்களில் சில கட்டிடக்கலை அம்சங்களுடன் கூடிய ஒன்றாகவும் உள்ளன. இப்பின்னணியில் இவ்வாய்ப்பு இலங்கையில் மஸ்ஜித் கட்டிடக்கலையின் பரிணாம வளர்ச்சியினையும் வரலாற்று மஸ்ஜித்களின் காண்பிய அழகியல் வெளிப்பாட்டினை பரிசீலிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது. பண்பு சார் ஆய்வு வழிமுறைகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இல் நேர்நிலை ஆய்வானது நேரடியான கள ஆய்வினூடாக பெறப்பட்ட அவதானக்குறிப்புக்கள், புகைப்பட ஆய்வினூடாக (Photographic Study) பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வுக்குட்படுத்தியுள்ளது. இலக்கிய மீளாய்வின் மூலம் ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத்திட்டம் நிறுவப்பட்டுள்ளது. பிற்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம் சமூகம் பெற்ற வளர்ச்சியும் செழிப்பும் நிலையான கட்டிடத்தைக்கொண்ட மஸ்ஜித்களை நிர்மாணிக்க வழிகோலியுள்ளது. இம்மஸ்ஜித்கள் சில அதற்கே உரித்தான கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் கண்டி, காலி, கொழும்பு, புத்தளம் மற்றும் களுத்துறை போன்ற இடங்களிலுள்ள மஸ்ஜித்கள் வரலாற்று மஸ்ஜித்களாக அடையாளப்படுத்த தக்கனவாகும். மஸ்ஜித் கட்டிடக்கலையின் இலங்கையில் வரலாற்று மஸ்ஜித்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் கால தேச பரிமாணத்திற்கு ஏற்ப வேறுபாடுகளையும் இக்கட்டிடக்கலையில் காண முடிகின்றது. இது தவிர இலங்கை முஸ்லிம்களுக்கே உரித்தான பண்பாட்டு பாரம்பரியம், கொள்கை தனித்துவம் என்பனவும் இலங்கை மஸ்ஜித் கட்டிடக்கலையில் உள்ளன. இவ்வாய்வானது இலங்கை மஸ்ஜித் கட்டிடக்கலைக்கான ஓர் ஆவணமாவதோடு மஸ்ஜித் கட்டிட நிர்மாணத்தில் ஈடுபடுபவர்களுக்கான வழிகாட்டியாகவும் அமையவல்லது.*

***திறவுச்சொற்கள்:*** *இலங்கை, மஸ்ஜித், மஸ்ஜித் கட்டிடக்கலை, இஸ்லாமிய கட்டிடக்கலை, அழகியல்*